**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8082862

C

1. District : மாவட்டம் : அரியலூர்    PS: காவல்நிலையம்: ஊ.த.க.பிரி    Year: ஆண்டு: 2023    FIR No.: மு.த.அ. எண்: 2/2023    Date: நாள்: 21.6.2023

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act.    Sections பிரிவுகள்: 7 of PC Act
   (ii) Act சட்டம்: 1988 (as amended in 2018)    Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல் 19.6.2023    Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல் 19.15 மணி    Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.6.2023    Time : நேரம் 05.00 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் —    Time : நேரம் —

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக    எழுத்து மூலம் (computerised copy)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்    உடையார்பாளையம் தாலுகா அலுவலகம், இருப்பு ஜெயங்கொண்டம்.
   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. சுரேஷ்    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ராஜேந்திரன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு —    (d) Nationality : நாட்டினம் இந்தியன்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் விவசாயம்    (g) Address : முகவரி No. 1/62 மேட்டுத்தெரு, கல்லாத்தூர், தண்டலை (PO), உடையார்பாளையம் (TK) அரியலூர் (Dt).

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. சரவணன், மண்டல துணை வட்டாட்சியர், ஜெயங்கொண்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

21.06.2023-ம்தேதி காலை 08.00 மணிக்கு அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் அலுவலகத்தில் இருந்தபோது அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், கல்லாத்தூர் தண்டலை, மேட்டுத்தெருவைச் சேர்ந்த ராஜேந்திரன் என்பவரது மகன் திரு.R.சுரேஷ் என்பவர் என்முன் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர், R.சுரேஷ் த/பெ ராஜேந்திரன், 1/62, மேட்டுத்தெரு, கல்லாத்தூர், தண்டலை (Po), உடையார்பாளையம் வட்டம், அரியலூர் மாவட்டம். செல் - 9976335054. பெறுநர், உயர்திரு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, அரியலூர். அய்யா, நான், மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் டிப்ளோமா மெக்கானிக்கல் இன்ஜினியரிங் படித்துவிட்டு, சென்னையில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் CNC Programmer-ஆக வேலை பார்த்துவந்தேன். கொரோனா காலத்திலிருந்து எனது சொந்த ஊரிலேயே விவசாயம் பார்த்து வருகிறேன். உடையார்பாளையம் வட்டம், கீழக்குடியிருப்பு கிராம சர்வே எண். 219/23-ல் எங்களுக்கு சொந்தமான, எங்களது அனுபோகத்தில் 6 செண்ட் பூர்வீக இடம் உள்ளது. மேற்படி சொத்து எங்களுக்கும் எங்களது சின்ன தாத்தா ராசுபிள்ளை வகையராவுக்கும் பாத்தியப்பட்ட

[Separate Sheet Enclosed]

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. Suresh. 21.06.2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 21/6/2023
Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 21. 6. 2023

Name: பெயர் R.CHANDRASEKAR
Rank: நிலை DSP/VACB/ARL.

சொத்தாகும். மேற்படி சொத்து சம்பந்தமான ஆவணங்களை பார்த்தபோது 1985-ம் ஆண்டுக்கு பிறகு நடைபெற்ற UDR திட்ட பணியின்போது எங்களது அனுபோகத்தில் உள்ள மேற்படி சொத்தினை எங்களது சின்ன கொள்ளுதாத்தா திரு.பட்டுசாமி என்பவரது பெயரில் UDR பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதும், அதேபோல் எங்களது பங்காளிகளான பாலசுப்பிரமணியன் வகையராக்களுக்கு சொந்தமான கீழக்குடியிருப்பு சர்வே எண். 219/22-ல் உள்ள சுமார் 6 செண்ட் நிலத்தின் பாட்டாவில் எனது பெயரையும், எனது தம்பி திலக் என்பவர் பெயரையும், எங்களது சின்ன தாத்தா ராசுபிள்ளை மகன் தவசாமி என்பவர் பெயரையும் கூட்டு பட்டாவாக சேர்க்கப்பட்டுள்ளதும் தெரியவந்தது. எனவே, எங்களுக்கு சொந்தமான, எங்களது அனுபோகத்தில் உள்ள கீழக்குடியிருப்பு சர்வே எண். 219/23-ல் உள்ள 6 செண்ட் நிலத்தில் எங்களுக்கு சேரவேண்டிய நிலத்தினை பட்டாமாற்றம் செய்து தரவேண்டி கடந்த 10.05.2022-ம்தேதி ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்திருந்தேன். அந்த மனுவின் பேரில் எந்த வித நடவடிக்கையும் மேற்கொள்ளாததால், மாவட்ட ஆட்சியர் அவர்களின் மக்கள் குறைதீர்க்கும் நாளில் நடைபெற்ற கூட்டத்திலும், CM Cell-லிலும் மனு கொடுத்திருந்தேன். பின்னர் 20.07.2022-ம்தேதி கிராம நிர்வாக அலுவலர் திருமதி.பிரவீனா என்பவர் எங்களது இடத்தினை பார்வையிட்டு ஊர் பொதுமக்களிடம் விசாரணை செய்தார். பின்னர் நான் கொடுத்த GDP Petition-க்கு பதிலறிக்கையாக மேற்படி இடம் சுரேஷ் ஆகிய எனது அனுபவத்தில் உள்ளது என்றும், உரிய ஆவணம் சமர்பிக்கும் பட்சத்தில் பட்டா மாற்றி தரப்படும் என்றும் அறிக்கை நகல் வழங்கப்பட்டது. பின்னர் மேற்படி இடத்திற்கான 1900 முதல் 1985 வரைக்கான வில்லங்கச்சான்று, எனது பாட்டனார் தங்கராசு அவர்கள் நிலவரிச் செலுத்திய நகல் மற்றும் 1920-ம்ஆண்டிற்கான ‘அ’ பதிவேடு நகல் ஆகியவற்றினை இணைத்து கடந்த 30.11.2022-ம்தேதி ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்படி இடத்தினை பட்டா மாற்றம் செய்து வழங்க வேண்டி மனு கொடுத்திருந்தேன். அந்த மனு சம்பந்தமாக கடந்த 03.03.2023-ம்தேதி ஜெயங்கொண்டம் தாலுகா அலுவலகத்தில் விசாரணைக்கு ஆஜராகும்படி சொன்னார்கள். அதன்படி நான், எனது தம்பி திலக், செல்வதுரை, சாந்தி ஆகியோர் விசாரணைக்கு ஆஜரானோம். அப்போது எங்களை தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு.அண்ணாதுரை அவர்கள் விசாரணை செய்தார். பின்னர் அவரிடம் நாங்கள் எழுத்துப்பூர்வமாக அறிக்கை சமர்ப்பித்தோம். பின்னர் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாததால் நான் மேற்படி மனுமீதான விசாரணை அறிக்கை விபரங்களை கேட்டு 20.03.2023-ம்தேதி தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனு கொடுத்திருந்தேன். அதன்பின்னர் 20.03.2023 நாளிட்ட வட்டாட்சியர் அலுவலக கடிதம் ஒன்று எனக்கு தபால் மூலமாக வந்தது. அந்த கடிதத்தின்படி மண்டல துணை வட்டாட்சியர் அவர்களை எனது மனு மீது உரிய விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்பிக்குமாறு வட்டாட்சியர் அவர்களால் உத்தரவிடப்பட்டிருந்தது. அதன்பின்னரும் எனது மனுமீது நடவடிக்கை மேற்கொள்ளாததால், நான் 04.05.2023-ம்தேதி என் மனுமீதான விசாரணை அறிக்கை விபரங்களை கேட்டு மீண்டும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனு கொடுத்திருந்தேன். அதன்பேரில் பொது தகவல் அலுவலர் மற்றும் தலைமையிடத்து துணை வட்டாட்சியர், உடையார்பாளையம் அவர்களது கடித எண். மூ.மு/அ4/3301/2023, நாள்: 30.05.2023-ன்படி தகவல் அனுப்பி வைத்தார்கள். அதில் நான் 30.11.2022 அன்று வழங்கிய மனுவின் கோப்பானது நடவடிக்கையில் உள்ளதால் தகவல் அறியும் உரிமை சட்டம் 2005-ன்கீழ் கோப்பு வழங்க இயலாது என்று தகவல் தெரிவித்திருந்தனர். அத்துடன் நான் கேட்ட சில விபரங்களுக்கான பதில்கள் மற்றும் ஆவணங்கள் இணைத்து அனுப்பி வைத்திருந்தனர். பின்னர் கடந்த 07.06.2023-ம்தேதி ஜெயங்கொண்டத்தில் உள்ள வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று தலைமையிடத்து துணை

வட்டாட்சியர் அவர்களை சந்தித்து எனது மனு சம்பந்தமாக கேட்டேன். அப்போது அவர் உங்களது மனு சம்பந்தமாக கிராம நிர்வாக அலுவலரும், மண்டல துணை வட்டாட்சியரும் தான் அறிக்கை சமர்பிக்க வேண்டும் என்றும், அதனால் நீங்கள் மண்டல துணை வட்டாட்சியரை போய் பாருங்கள் என்றும் கூறினார். அன்றைய தினமே நான் மண்டல துணை வட்டாட்சியர் திரு.சரவணன் என்பவரை சந்தித்து எனது மனுசம்பந்தமாக கேட்டேன். அதற்கு அவர் உங்களுக்கு பட்டா மாற்றம் செய்ய வேண்டுமென்றால் அதில் ஏகப்பட்ட வேலைகள் உள்ளது என்றும், அதற்கு கொஞ்சம் செலவாகும் என்றும், பின்னர் ஒரு வாரம் கழித்து வந்து என்னை பாருங்கள் என்றும் கூறினார். அதன்பேரில் நான் கடந்த 19.06.2023-ம்தேதி மாலை ஜெயங்கொண்டத்தில் உள்ள வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று மண்டல துணை வட்டாட்சியர் திரு.சரவணன் அவர்களை சந்தித்தபோது, கொஞ்சநேரம் காத்திருக்குமாறு சொன்னார். பின்னர் இரவு சுமார் 07.15 மணியளவில் அவரை மீண்டும் சந்தித்தபோது உங்களுக்கு பட்டா மாற்றம் செய்துதர வேண்டுமென்றால் ஒரு செண்டிற்கு இரண்டாயிரம் வீதம், 6 செண்ட்க்கு ரூ.12000/-ம் பணம் கொடுங்கள், உங்களுக்கு உடனே பட்டா மாற்றம் செய்து தருகிறேன், இல்லை என்றால் உங்கள் மனு பெண்டிங்கில்தான் இருக்கும் என்றார். நான் அவரிடம் பணம் இல்லாமல் ஏதும் செய்து கொடுக்க முடியாதா சார் என்று கேட்டேன். அதற்கு அவர் பணம் கொடுத்தால் தான் வேலை நடக்கும், இல்லை என்றால் உங்களது வேலை நடக்காது, வேண்டுமென்றால் நான் கேட்ட பணத்தில் இரண்டாயிரத்தை குறைத்துக்கொண்டு ரவுண்டாக ரூ.10000/-ம் பணத்துடன் புதன்கிழமையன்று என்னை வந்து அலுவலகத்தில் பாருங்கள், உங்களது வேலையை அடுத்த நாளே முடித்து கொடுத்து விடுகிறேன் என்று சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை என்றாலும், அப்போதைக்கு சரிசார், பணத்த ரெடிபண்ணிக்கிட்டு வந்து பார்க்கிறேன் சார் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுக்கலாம் என்று முடிவு செய்து, மண்டல துணை வட்டாட்சியர் திரு.சரவணன் என்பவர் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.10000/-ஐ ரெடிபண்ணிக்கொண்டு வந்துள்ளேன். என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட மண்டல துணை வட்டாட்சியர் திரு.சரவணன் என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, (sd.) (ஆங்கிலத்தில் ஒப்பம் தேதி 21.06.2023). **SUBMITTED** Sir, Received this computer typed written complaint from the complainant on 21.06.2023 at 08.00 hrs, verified and ascertained its genuineness through sources, and registered a case on the complaint on 21.06.2023 at 09.30 hrs in Ariyalur Vigilance and Anti-Corruption Detachment Crime No.02/2023, U/s 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018). (sd) R.Chandrasekar, Deputy Superintendent of Police, V&AC, Ariyalur. I am submitting the Original F.I.R. along with the complaint to the Hon'ble Court of the Chief Judicial Magistrate, Ariyalur and the copies of the F.I.R to all other concerned Officials.

21/6/2023
DSP/V&AC/Arl.